**ஜூன் – 11**

# TNPSC துளிகள்

- விமானப்படையின் படைத் தலைவர் மனிஷா, இந்தியாவில் (மிசோரம்) ஆளுநருக்கு ஒரு உதவியாளராக (ADC) நியமிக்கப்பட்ட இந்தியாவின் முதல் மகளிர் இந்திய ஆயுதப் படை அதிகாரி ஆனார்.
- இந்திய ரிசர்வ் வங்கியின் திருத்தப்பட்ட விதிமுறைகளின் கீழ், 2.5 லட்சம் ரூபாய்க்கும் குறைவான தங்க நகைக் கடன்களுக்கான கடன்-மதிப்பு (LTV) விகித வரம்பானது 75 சதவீதத்திலிருந்து 85% ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமானது Ikigai Law மற்றும் IndiaAI திட்டத்துடன் இணைந்து, யுனெஸ்கோ அமைப்பின் தெற்காசியாவிற்கான பிராந்திய அலுவலகம் ஆனது, செயற்கை நுண்ணறிவு தயார்நிலை மதிப்பீட்டு முறை (RAM) குறித்த ஐந்தாவது மற்றும் இறுதி பங்குதாரர் ஆலோசனையை நடத்தியது.
- எலோன் மஸ்க்கின் ஸ்டார்லிங்க் நிறுவனமானது, Eutelsat OneWeb மற்றும் Jio Satellite Communications ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக நமது நாட்டில் செயற்கைக்கோள் வழி வகையிலான இணையதளச் சேவைகளை வழங்குவதற்காக தொலைத்தொடர்புத் துறையிடம் இருந்து உரிமத்தைப் பெற்றுள்ள மூன்றாவது நிறுவனமாக மாறியுள்ளது.
- நீடித்த மற்றும் நிலையான திட்டங்களுக்கு நிதியளிப்பதை எளிதாக்குவதற்கும் SDG இலக்குகளுக்கான இடைவெளியைக் குறைப்பதற்கும், சமூக, நிலைத்தன்மை மற்றும் நிலைத்தன்மையுடன் இணைக்கப்பட்ட பத்திரங்கள் உள்ளிட்ட சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை (ESG) கடன் பத்திரங்களுக்கான செயல்பாட்டுக் கட்டமைப்பை SEBI அறிமுகப்படுத்தியுள்ளது.
- 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஒரு இரண்டு ஆண்டுகளுக்கு பஹ்ரைன், கொலம்பியா, ஜனநாயகக் காங்கோ குடியரசு, லாத்வியா மற்றும் லைபீரியா ஆகிய நாடுகள் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிரந்தரமற்ற உறுப்பினர்களாகச் செயலாற்றத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- வங்காளதேசத்தின் இடைக்கால அரசாங்கமானது, 2022 ஆம் ஆண்டு சட்டத்தினை மாற்றியமைத்து, ஷேக் முஜிபுர் ரஹ்மானை 'தேசத்தின் தந்தை' என்று குறிப்பிடுவதை நீக்கியுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## மாநிலத் திட்டக் குழு ஆணையத்தின் அறிக்கைகள் 2025

- மாநிலத் திட்டக் குழு ஆணையத்தின் நான்கு அறிக்கைகள் தமிழக முதலமைச்சரிடம் தற்போது சமர்ப்பிக்கப் பட்டன.
- இதில் ஒரு அறிக்கையானது 'தமிழ்நாட்டில் விவசாயம் சாராத ஊரக வேலைவாய்ப்பு' என்று தலைப்பிடப் பட்டது.
- இது மிக அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச விவசாயம் சாராத ஊரக வேலைவாய்ப்பு கொண்ட 12 மாவட்டங்களின் 6 கிராமங்களில் எடுக்கப் பட்டது.
- இது விவசாயத்தில் இருந்து மாறுகின்ற ஒரு மிக முக்கியமான மாற்றத்தைச் சுட்டிக் காட்டியது.
- இது கட்டுமானம் மற்றும் உற்பத்தித் துறை போன்ற விவசாயம் சாராத துறைகளில் பணியாளர்கள் அதிகரித்து வரும் ஒரு எண்ணிக்கையாகும்.

- இம்மாநிலத்தில், 75 சதவீதத்திற்கும் மேற்பட்ட ஆண் தொழிலாளர்களும் 50% பெண் தொழிலாளர்களும் தற்போது வேளாண்மை சாராத பல நடவடிக்கைகளில் ஈடுபட்டு உள்ளனர் என்பதை இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.
- ஆண் தொழிலாளர்கள், மிக குறிப்பாக இளைஞர்கள் கட்டுமான தொழில்துறையில் அதிகம் ஈடுபட்டுள்ள துறையாக உருவெடுத்துள்ளது.
- உற்பத்தித் துறையானது, அனைத்து வயதினரிலும் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் முதன்மைத் துறையாக உள்ளது.
- 2012 ஆம் ஆண்டு முதல் வேலைவாய்ப்புகளுக்காக விவசாயத்தைச் சார்ந்திருப்பது 20% என்ற அளவிற்கு குறைவது நிகழ்ந்துள்ளது.
- இந்த மாற்றத்திற்கு வழி வகுக்கும் இளம் தொழிலாளர்கள் (15–34 வயதுடையவர்கள்) சிறந்த ஊதியம் மற்றும் அதிக நிலைத் தன்மையின் காரணமாக வேளாண் சாராத வேலைகளை விரும்புகிறார்கள்.
- மற்ற மூன்று அறிக்கைகள் -
  - ஒரு நிலையான மேம்பாட்டு இலக்குகளுக்கான தமிழ்நாட்டின் தொலைநோக்குப் பார்வை,
  - தமிழ்நாட்டின் வாகன உற்பத்தித் துறையின் எதிர்காலம் மற்றும்
  - தமிழ்நாடு மாநிலத்தினை மாற்றி மறுவடிவமைக்கச் செய்தல் – ஒரு அறிவுசார்ப் பொருளாதாரத்திற்கான பாதை.




## MGNREGS குறித்தத் தரவு 2025


- தமிழ்நாட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் (MGNREGS) கீழ் சுமார் 88 லட்சம் பயனாளிகளுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.
- 2025-26 ஆம் ஆண்டில், தொழிலாளர் வேலை நாட்கள் ஒதுக்கீடானது 12 கோடி மனித உழைப்பு நாட்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.
- 2024-25 ஆம் ஆண்டிலும், தமிழ்நாட்டிற்கு 20 கோடி மனித உழைப்பு நாட்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டது.
- பின்னர், மத்திய அரசானது கூடுதலாக சுமார் 10 கோடி மனித உழைப்பு நாட்களுக்கு ஒப்புதல் அளித்தது என்ற நிலையில் மொத்த மனித உழைப்பு நாட்கள் 30.61 கோடியாக உயர்ந்தது.

- தமிழ்நாடு அரசு திருத்தப்பட்ட ஊதியப் பட்டியலை அறிவித்தது என்பதோடு இதில் ஊதியம் ஆனது 319 ரூபாயிலிருந்து 336 ரூபாய் ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**Target and performance of select districts**

| District | Person-days allocated during 2025-26 (in lakh) | Person-days generated as on June 6, 2025 (in lakh) | Person-days generated during 2024-25 (in lakh) |
|---|---|---|---|
| Tiruvannamalai | 110 | 12.26 | 229.66 |
| Villupuram | 81 | 3.85 | 178.63 |
| Cuddalore | 75 | 7.65 | 155.82 |
| Tiruvallur | 64 | 5.5 | 128.94 |
| Pudukkottai | 60 | 4.99 | 126.01 |
| Madurai | 54 | 1.41 | 118.69 |
| Virudhunagar | 49 | 2.95 | 99.88 |
| Dindigul | 46 | 1.84 | 97.22 |
| Krishnagiri | 44 | 2.65 | 100.47 |
| Sivagangai | 42 | 1.72 | 84.74 |

## மின்சார வாகனங்களுக்கான பொது மின்னேற்ற நிலையங்களின் மின்சார நுகர்வு





- தமிழ்நாட்டின் மின்சார வாகன பொது மின்னேற்ற நிலையங்கள் (EV-PCS) 2024-2025 ஆம் நிதியாண்டில் 16.17 மில்லியன் அலகு (MU) மின்சாரத்தினைப் பயன்படுத்தியுள்ளன.
- இது 2023-2024 ஆம் ஆண்டில் 13.383 மில்லியன் அலகுகளாக இருந்த ஒரு அளவினை விட சுமார் 20.8% அதிகரித்துள்ளது.
- டெல்லியில் EV-PCS மின்சார நுகர்வு அதிகபட்சமாக 328.03 MU ஆக இருந்தது.

- அதைத் தொடர்ந்து மகாராஷ்டிரா (216.82 MU), கர்நாடகா (79.61 MU) மற்றும் குஜராத் (64.11 MU) ஆகியன உள்ளன.

# தேசியச் செய்திகள்

## 8வது EnviStats India 2025 அறிக்கை

- சமீபத்தில் 8வது "EnviStats India 2025: சுற்றுச்சூழல் புள்ளிவிவரங்கள்" என்ற தலைப்பில் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது.
- வருடாந்திர சராசரி வெப்பநிலையானது 2001 ஆம் ஆண்டில் 25.05 டிகிரி செல்சியசில் இருந்து, 2024 ஆம் ஆண்டில் 25.74°C ஆக அதிகரித்தது.
- 2001 முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான வருடாந்திர மழைப்பொழிவுத் தரவானது, பருவமழை செயல்பாடுகளின் தாக்கத்திற்குள்ளான மிக குறிப்பிடத்தக்க வருடாந்திர மாறுபாட்டை எடுத்துக்காட்டுகிறது.
- இந்தியாவில் 20,613 கடல் சார் விலங்கினங்கள் உள்ளன.
- இந்தியாவில் 9,436 நன்னீர் இனங்கள், இந்தியச் சதுப்புநில அமைப்பில் 5,023 இனங்கள், கழிமுக சுற்றுச்சூழல் அமைப்பில் 3,383 இனங்கள் மற்றும் அதன் மண்வளச் சூழலியல் அமைப்பில் முக்கியத்துவம் வாய்ந்த 22,404 இனங்கள் உள்ளன.
- உள்நாட்டு மீன் உற்பத்தியானது 2013-14 ஆம் ஆண்டில் இருந்த 61.36 லட்சம் டன்னில் இருந்து, 2023–24 ஆம் ஆண்டில் 139.07 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களிலிருந்துப் பெறப்பட்ட மின்சார உற்பத்தி 2013-14 முதல் 2023-24 ஆம் ஆண்டு வரையிலான ஒரு காலக் கட்டத்தில் 65520 GWh என்ற ஒரு அளவிலிருந்து 2,25,835 GWh ஆக அதிகரித்துள்ளது.
- அதே காலக் கட்டத்தில் அனல் மின் உற்பத்தி 7,92,053 GWh என்ற அளவிலிருந்து 13,26,549 GWh ஆக அதிகரித்துள்ளது.
- உள்நாட்டு மீன் உற்பத்தியானது, 2013-14 முதல் 2023–24 ஆம் ஆண்டு வரையிலான ஒரு காலக் கட்டத்தில் 61.36 லட்சம் டன்னிலிருந்து 139.07 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.




## கழிவுச் சேகரிப்பாளர் கணக்கெடுப்புச் செயலி

- சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் (MoSJE) ஆனது, NAMASTE திட்டத்தின் கீழ் கழிவு / குப்பைச் சேகரிப்பாளர்களின் விவரக் குறிப்பினைச் சேகரிப்பதற்கு நாடு தழுவிய அளவில் எண்ணிமச் செயலியை அறிமுகப்படுத்துகிறது.


- இது 2.5 லட்சம் நபர்களைக் கணக்கெடுத்து, அவர்களுக்கு மிகவும் முறையானதொரு அடையாளத்தையும், சமூகப் பாதுகாப்பிற்கான ஒரு அணுகலையும் வழங்குவதை மிக முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதில் புகைப்படம் கொண்ட தொழில்முறை சார் அடையாள அட்டைகளை வழங்கச் செய்தல் மற்றும் சுகாதாரக் காப்பீடு, தனிப்பட்டப் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் திறன் மேம்பாட்டு வாய்ப்புகளை வழங்குதல் ஆகியவையும் அடங்கும்.



Ministry of Social Justice and Empowerment launched the National Waste Picker Enumeration App as part of the NAMASTE initiative

## சர்வதேசச் செய்திகள்

### HawkEye 360 தொழில்நுட்ப ஒப்பந்தம்





- அமெரிக்க நாடானது இந்தியாவிற்கு HawkEye 360 என்ற தொழில்நுட்பத்தை விற்பனை செய்வதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- HawkEye 360 என்பது புவியின் தாழ் மட்டச் சுற்றுப்பாதையில் செயற்கைக்கோள்களின் வலையமைப்பை இயக்கும் ஒரு தனியார் அமெரிக்க நிறுவனமாகும்.
- இந்த செயற்கைக்கோள்கள் ஆனது கப்பல்கள், விமானங்கள், வாகனங்கள் மற்றும் கடலோர அமைப்புகளிலிருந்து வரும் சில ரேடியோ அதிர்வெண் (RF) சமிக்ஞைகளைக் கண்காணிக்கின்றன.

- இது கண்காணிப்பிலிருந்துத் தப்பிக்க தனது தானியங்கி அடையாள அமைப்புகளை (AIS) அணைக்கும் கப்பல்களைக் கண்டறிவதற்குப் பயனுள்ளதாக இருக்கும்.
- இந்த 'மறைவு நிலையில் உள்ள' கப்பல்கள் சர்ச்சைக்குரிய நீர்நிலைகள் அல்லது சட்ட விரோத நடவடிக்கைகள் நிகழும் பல்வேறு பகுதிகளில் குறிப்பிடத்தக்கச் சவால்களை ஏற்படுத்துகின்றன.

## சோகோத்ரா தீவில் மனிதாபிமான முன்னெடுப்பு

- சோகோத்ரா தீவில் பெண்கள் மற்றும் குழந்தைகளை பாதிக்கும் கடுமையான ஊட்டச் சத்து குறைபாட்டை எதிர்த்துப் போராடுவதற்காக என ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவை இணைந்து ஒரு மிகவும் விரிவான மனிதாபிமான முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளன.
- ஏமன் நாட்டில் சோகோத்ரா தீவில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையேயான உலகளாவிய கடுமையான ஊட்டச்சத்து குறைபாடு விகிதம் ஆனது 10.9 சதவீதத்தை எட்டியுள்ளது.
- மேலும், கடுமையான ஊட்டச்சத்து குறைபாடானது இந்த மக்கள்தொகையில் சுமார் 1.6 சதவீதம் பேரைப் பாதிக்கிறது.
- சர்வதேச சுகாதார தரநிலைகள் 10 முதல் 14 சதவீதம் வரையிலான GAM விகிதங்களை தீவிரமானவை என வகைப்படுத்துகின்றன.
- சோகோத்ரா ஆனது அதன் மிகப்பெரும் தனித்துவமான தாவரங்கள் மற்றும் பல்வேறு விலங்கினங்களுக்காகப் பெயர் பெற்ற "இந்தியப் பெருங்கடலின் கேலபோகஸ்" என்று அழைக்கப்படும் வளமான பல்லுயிர்ப் பெருக்கம் நிறைந்த தீவாகும்.
- இது இந்தியப் பெருங்கடலில், ஏமனின் தென்கிழக்கே ஆப்பிரிக்க முனைக்கு அருகில் சுமார் 340 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.





## ஐக்கிய நாடுகள் சபையின் தீவிரவாத எதிர்ப்புக் குழுவின் துணைத் தலைமை

- 2025 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் (UNSC) தாலிபான் தடைக் குழுவிற்குப் பாகிஸ்தான் தலைமை தாங்கவுள்ளது.
- 15 நாடுகளைக் கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் தீவிரவாத எதிர்ப்புக் குழுவின் துணைத் தலைமைப் பொறுப்பினை இது வகிக்கும்.
- UNSC சபையின் 1267 ISIL மற்றும் அல்-கொய்தா தடைக் குழுவிற்கு டென்மார்க் நாடு தலைமை தாங்க உள்ளது.

- ரஷ்யா மற்றும் சியரா லியோன் ஆகியவை இணைந்து 2025 ஆம் ஆண்டிற்கான துணைத் தலைமைப் பொறுப்பினை ஏற்கும்.
- 1988 தலிபான் தடைக் குழுவிற்குப் பாகிஸ்தான் தலைமை தாங்கும்.
- ஆப்கானிஸ்தானின் அமைதி, நிலைத் தன்மை மற்றும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருப்பதில் தாலிபனுடன் தொடர்புடைய தனிநபர்கள், குழுக்கள், தனியார் அல்லது சில பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் இன்ன பிற நிறுவனங்கள் ஆகியவை மீது சொத்து முடக்கம், பயணத் தடை மற்றும் ஆயுதத் தடையை இந்த ஒரு தீர்மானமானது விதிக்கிறது.
- கயானா மற்றும் ரஷ்யா ஆகியவை தாலிபன் தடைக் குழுவின் துணைத் தலைமைப் பொறுப்பினை ஏற்கும்.
- பாகிஸ்தான் நாடானது, 15 நாடுகளை உறுப்பினராகக் கொண்ட பாதுகாப்பு சபையில் 2025-26 ஆம் ஆண்டு காலக் கட்டத்திற்கு நிரந்தரமற்ற உறுப்பினராகச் செயல்படும்.
- இந்தியாவானது, இந்த சபையில் ஒரு நிரந்தரமற்ற உறுப்பினராக இருந்த 2021-22 ஆம் ஆண்டு காலக் கட்டத்தில், 2022 ஆம் ஆண்டிற்கான UNSC தீவிரவாத எதிர்ப்புக் குழுவின் தலைமைப் பொறுப்பினை வகித்தது.




## தொண்டை அழற்சி நோய் பெருந்தொற்று - மேற்கு ஐரோப்பா




- கடந்த 70 ஆண்டுகளில் மேற்கு ஐரோப்பாவில் பதிவாகாத மிகப்பெரிய தொண்டை அழற்சி நோய் பெருந்தொற்று ஆனது, 2022 ஆம் ஆண்டு முதல் புலம்பெயர்ந்தோர்


மற்றும் வீடற்றவர்கள் போன்ற நலிவடைந்த மக்களைப் பாதித்து வருகிறது.

- டிப்தீரியா என்பது சுவாசக் குழாயைத் தாக்கி உடல் முழுவதும் பரவக்கூடிய கொடிய பாக்டீரியா தொற்றுநோய் ஆகும்.
- தொண்டை அழற்சி நோய் என்பது ஒரு பெருந்தொற்றினை ஏற்படுத்தும் பாக்டீரியா கோரினேபாக்டீரியம் டிப்தீரியா ஆகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## KATRIN பரிசோதனை 2025

- நேரடி நியூட்ரினோ நிறை அளவீடுகள் என்ற துறையில் KATRIN ஒரு புதிய உலகளாவிய அளவுருவினை அமைத்துள்ளது.
- நம்ப முடியாத அளவிற்கு ஏராளமாக உள்ள நியூட்ரினோக்கள் நேரடியாக கண்டறிய முடியாத அளவிற்கு சாதாரண பொருள் வழியாக செல்கின்றன.
- ஹைட்ரஜனின் ஒரு கதிரியக்க ஐசோடோப்பான ட்ரிடியத்தின் பீட்டா சிதைவை ஆய்வு செய்வதில் KATRIN பரிசோதனை கவனம் செலுத்துகிறது.
- இந்தச் சோதனையின் போது, நியூட்ரினோ நிறையின் அதிகபட்ச வரம்பு ஆனது 0.45 $eV/c^2$ அதாவது சுமார் $8 \times 10^{-37}$ கிலோகிராம்கள் ஆகக் குறைக்கப் பட்டுள்ளது.
- KATRIN என்பது கார்ல்ஸ்ரூஹே ட்ரிடியம் நியூட்ரினோ பரிசோதனையைக் குறிக்கிறது என்பதோடு மேலும் இது ஜெர்மனியின் கார்ல்ஸ்ரூஹே எனுமிடத்தில் அமைந்துள்ளது.




## ஜரோசைட்

- குஜராத்தில் உள்ள கட்ச் பகுதியிலிருந்து ஆறு ஜரோசைட் இழைகளை இந்தியாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மாதிரியாக சேகரித்துள்ளனர்.
- செவ்வாய்க் கிரகத்தின் இயற்கையானப் பூகோளவியல் கடிகாரமாக இது செயல்படக் கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- ஜரோசைட் என்பது பொட்டாசியம், இரும்பு மற்றும் சல்பேட் ஆகியவற்றைக் கொண்ட மஞ்சள்-பழுப்பு நிற கனிமமாகும்.
- இது கதிர்வீச்சினால் தூண்டப்பட்ட ஒளிர்வை வெளிப்படுத்துகிறது.
- இந்த பண்பு ஆனது சுமார் 25,000 ஆண்டுகளுக்கு முந்தைய நிகழ்வுகள் வரை பதிவு

செய்யக்கூடிய அமைப்பாக/ பொருளாகச் செயல்படுகிறது.

- ❖ இது போன்ற ஜரோசைட் செவ்வாய் கிரகத்தின் மெரிடியானி பிளானம் மற்றும் கேல் பள்ளத்தில் உள்ள நாசாவின் Opportunity மற்றும் Curiosity போன்ற உலாவிக் கலங்களால் கண்டறியப் பட்டது.


**Properties of Jarosite:**

- Crystallizes in the trigonal system.
- Brittle in nature with basal cleavage.
- Colour ranges from dark yellow to yellow-brown.
- Hardness is 2.5 to 3.5 on the Mohs scale.
- Lustre is vitreous to dull; appears translucent to opaque.
- Retains luminescence up to 450°C.
- Forms by oxidation of iron sulfides like pyrite.

**Applications of Jarosite:**

- Acts as a planetary dating tool for Martian events up to 25,000 years old.
- Useful in Mars missions with rover heaters and LEDs for non-destructive dating.
- Serves as an environmental indicator in mining and glacial studies.
- Functions as a geological marker to trace ice age layers in Earth's cores.

## நாசாவின் GRAIL திட்டம்




- ❖ ஈர்ப்பு விசை மீட்சி மற்றும் உள்ளக ஆய்வகம் (GRAIL) திட்டம் ஆனது நிலவின் ஈர்ப்புப் புலத்தை ஆய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டது.
- ❖ இது 2011 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- ❖ இது எப் மற்றும் ஃப்ளோ என்ற இரண்டு எந்திர ஆய்வுக்கலங்களைக் கொண்டிருந்தது.
- ❖ நாசாவின் இந்த GRAIL திட்டம் ஆனது நிலவின் இரண்டு அரைக் கோளங்களுக்கு இடையிலான வேறுபாடுகளை வெளிப்படுத்தியுள்ளது.
- ❖ பூமியை நோக்கியுள்ள ஒரு பக்கமானது அதாவது அண்மைப் பக்கம் ஆனது சேய்மைப் பக்கத்தினை விட வெப்பமாகவும் அதன் ஆழ்ந்தப் பகுதியில் புவியியல் ரீதியாக அதிக

செயல்பாடுகள் மிக்கதாகவும் உள்ளது.

- பில்லியன் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு, நிலவின் அண்மைப் பக்கத்தில் ஏற்பட்ட தீவிரமான எரிமலை செயல்பாடுகள் பரந்த பாசால்டிக் எனும் பாறைச் சமவெளிகளை உருவாக்க வழி வகுத்தது.
- இதற்கு நேர்மாறாக, சேய்மைப் பக்கத்தில் / பின்புறத்தில் இலகுவான, பழைய கண்ட மேலோட்டினால் மூடப்பட்டிருக்கும் என்பதோடு இது ஒரு பெரிய அளவிலான எரிமலை வெடிப்பு பெரும்பாலும் நிகழாத பகுதியாக உள்ளது.
- அண்மைப் பக்கத்தின் மூடகம் ஆனது சேய்மைப் பக்கத்தினை விட 100 முதல் 200°C வரை வெப்பமாக உள்ளது.

## கடல்நீரில் கரையும் நெகிழி - ஜப்பான்

- ஜப்பானிய அறிவியலாளர்கள் கடல்நீரில் மிகவும் விரைவாகக் கரைந்து, எந்தத் தீங்கு விளைவிக்கும் எச்சத்தையும் விட்டு வைக்காத மிகவும் ஒரு புதிய வகை நெகிழியை உருவாக்கியுள்ளனர்.
- இந்தப் புதிய நெகிழி நுண்ணுயிரிகள் ஒரு வளர்சிதை மாற்றத்திற்கு உட்படுத்துகின்ற மற்றும் தாவரங்கள் உறிஞ்சும் வகையிலான நைட்ரஜன் மற்றும் பாஸ்பரஸை ஒரு விளைபொருளாக விடுவிக்கிறது.
- மனிதர்களுக்கு நச்சுத் தன்மையற்ற இது தீப்பற்றலை எதிர்க்கும் பல திறன்களைக் கொண்டுள்ளதோடு இவை கார்பன் டை ஆக்சைடை வெளியிடுவதில்லை.
- இந்தக் கூறுகள் மண்ணை வளப்படுத்தக் கூடியது என்றாலும், அவை கடலோர சுற்றுச் சூழல் அமைப்புகளை ஊட்டச் சத்துக்களால் நிறைக்கக் கூடும்.





# மாநிலச் செய்திகள்

## அமீபாவிற்கான மூலக்கூறு சோதனைக் கருவிகள்

- கேரள மாநிலமானது, ஐந்து பொதுவான வகை சுதந்திரமாக/கட்டுப்பாடின்றி வாழும் அமீபாவை (FLA) அடையாளம் காண வேண்டி அதன் சொந்த மூலக்கூறு கண்டறியும் சோதனைக் கருவிகளை உருவாக்கியது.

- மனிதர்களுக்கு நச்சுத்தன்மை வாய்ந்த அவை அமீபிக் மெனிங்கோஎன்செபாலிடிஸ் நோயை ஏற்படுத்தும்.
- மிகவும் ஆபத்தான ஒரு மூளைத் தொற்றான, அமீபிக் மெனிங்கோஎன்செபாலிடிஸ் பாதிப்புகள் தற்போது கேரளாவில் அடிக்கடி பதிவாகின்றன.
- சுற்றுச்சூழலில் 400க்கும் மேற்பட்ட சுதந்திரமாக வாழும் அமீபாக்கள் உள்ளன ஆனால் அவற்றுள் ஆறு மட்டுமே மனிதர்களுக்கு தொற்றினை ஏற்படுத்தும் நோய்க்கிருமியாக இருப்பதாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.
- அவற்றில் ஐந்து நச்சு உயிரினங்களை அடையாளம் காணும் ஒரு திறன் கொண்ட ஒரே ஆய்வகம் கேரள மாநிலப் பொதுச் சுகாதார ஆய்வகமாகும்.




# விளையாட்டுச் செய்திகள்

## 2025 பிரெஞ்சு ஓபன் போட்டி



- நடப்புச் சாம்பியனான ஸ்பெயின் நாட்டினைச் சேர்ந்த கார்லோஸ் அல்கராஸ் மீண்டும் 2025 ஆம் ஆண்டு பிரெஞ்சு ஓபன் ஆடவர் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டியில் வென்றுள்ளார்.
- இந்த இறுதிப் போட்டியானது ஐந்து மணி நேரம் 29 நிமிடங்கள் நீடித்த மிகவும் நீண்ட இறுதிப் போட்டியாகும்.
- இதற்கு முன்னதாக, ஓபன் போட்டிகள் வரலாற்றில் மிக நீண்ட பிரெஞ்சு ஓபன் இறுதிப்

போட்டி 1982 ஆம் ஆண்டில் நடைபெற்றது.

- அமெரிக்காவின் கோகோ காஃப் இதன் இறுதிப் போட்டியில் பெலாரஸ் நாட்டின் அரினா சபாலென்காவை வீழ்த்தி மகளிர் ஒற்றையர் பட்டத்தை வென்றார்.
- பத்தாண்டுகளுக்கு முன்பு செரீனா வில்லியம்ஸ் இதனை வென்றதற்குப் பிறகு ஒரு அமெரிக்கர் இதனை வெல்வது இதுவே முதல் முறையாகும்
- இத்தாலிய ஜோடியான சாரா எர்ரானி மற்றும் ஜாஸ்மின் பயோலினி ஆகியோர் இதில் மகளிர் இரட்டையர் பட்டத்தை வென்றுள்ளனர்.
- ஸ்பெயினைச் சேர்ந்த மார்செல் கிரானோலர்ஸ் மற்றும் அர்ஜென்டினா நாட்டினைச் சேர்ந்த ஹொராசியோ செபாலோஸ் ஆகியோர் பிரெஞ்சு ஓபன் ஆடவர் இரட்டையர் பிரிவில் வெற்றி பெற்றனர்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★